“நீங்கள் நலமா?” திட்டம் :

முதல்வர் மு.க.ஸ்டாலின் பயனாளிகளுடன் கலந்துரையாடல்!

காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு கருத்துகளைக் கேட்டறிந்தார்.

சென்னை, மார்ச் 18-

முதல்வரின் முகவரி துறையின் கீழ் பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமை திட்டமான “நீங்களும் நலமா” திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.3.2024 அன்று தொடங்கி வைத்து பயனாளிகளிடம் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் பயனாளிகளை தொடர்பு கொண்டு துறைவாரியாக நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளை கேட்டறிந்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (16.03. 2024) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து பல்வேறு பயனாளிகளை நேரடியாக காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத் திட்டங்கள் குறித்த அவர்களது பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார்கள்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மதுரை, தெப்பக்குளத்தைச் சேர்ந்த சி. விஜய் ஆனந்த் அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசி, அவர் இத்திட்டத்தின் மூலம் பெற்ற நன்மைகள் குறித்து வினவினார்.

அப்போது, விஜய் ஆனந்த் அவர்கள் அரசின் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தைப் பற்றி அறிந்து, அதன்மூலமாக மருத்துவமனைக்கான உபகரணங்கள் வாங்கிட தொழில் கடன் பெற்றதாக தெரிவித்தார். மேலும், தொழில் கடன் வேண்டி இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தவுடன் உடனடியாக அது பரிசீலிக்கப்பட்டு, வங்கியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்த தகவல்களை தெரிவித்து, அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து, எவ்வித தடங்கலுமின்றி விரைவாக 5 கோடி ரூபாய் வங்கிக் கடன் பெற்று, அதன்மூலம் மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது நல்ல பயன்பாட்டில் உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், சுய தொழில் தொடங்கியது குறித்து நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்ட போது, இதுவரை தான் ஒருவருக்கு கீழ் பணியாற்றி வந்ததாகவும், தற்போது தொழில்முனைவோராகி 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருவது மகிழ்ச்சியும், பெருமையும் அளிப்பதாக உள்ளது என விஜய் ஆனந்த் அவர்கள் தெரிவித்தார்.

இந்த திட்டத்தைப் பற்றி உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு தெரிவித்திருக்கிறீர்களா என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, தனக்கு தெரிந்த மருத்துவ நண்பர்களுக்கு இதுகுறித்து தெரிவித்திருப்பதாகவும், அவர்கள் அடுத்த மாதம் விண்ணப்பிக்க இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அவரது மருத்துவமனை நல்ல முறையில் செயல்பட்டு, வாழ்வு சிறப்புடன் அமைய முதலமைச்சர் அவர்கள் வாழ்த்தினார்.

மகளிர் சுய உதவிக்குழுவின் கீழ் பயன் பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரைச் சேர்ந்த திருமதி வி. பானுப்பிரியா அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது திருமதி பானுப்பிரியா அவர்கள் தான் ஸ்ரீ முத்துமாரியம்மன் மகளிர் குழுவில் உறுப்பினராக உள்ளதாகவும், மொத்தம் 20 பேர் அதில் உறுப்பினர்களாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

வங்கியிலிருந்து தங்களுக்கு எவ்வளவு கடன் கிடைத்தது, அதை வைத்து என்ன தொழில் செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்ட போது, திருமதி பானுப்பிரியா அவர்கள், வங்கியிலிருந்து கிடைத்த கடன் தொகையைக் கொண்டு தனது அரிசி கடையை விரிவாக்கம் செய்துள்ளதாக தெரிவித்தார். மேலும், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

சென்னை, வேப்பேரியில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கி பயின்று வரும் திருவண்ணாமலை மாவட்டம், வற்றாபுத்துர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி எஸ். பிரியதர்ஷினி அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது பிரியதர்ஷினி அவர்கள், தான் வியாசர்பாடிடாக்டர் அம்பேத்கர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B. Sc. (Nutrution) பட்டப் படிப்பு படித்து வருவதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக வேப்பேரி ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கி படித்து வருவதாகவும் தெரிவித்தார். இவ்விடுதியில் தங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கி உள்ளதாகவும் தெரிவித்தார்.

விடுதியில் ஏதாவது வசதிகள் தேவை இருந்தால் தெரிவிக்குமாறும், விடுதியை அதிகாரிகள் அடிக்கடி வந்து ஆய்வு செய்கிறார்களா என்றும் கேட்ட முதலமைச்சர் அவர்களிடம், விடுதியில் தேவையான எல்லா வசதிகளும் உள்ளது என்றும், மூன்று வேளையும் சரியான நேரத்தில் தரமான உணவு வழங்கப்படுவதாகவும், விடுதி பாதுகாப்பாக இருப்பதாகவும், அதிகாரிகள் வந்து ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதம் ரூ.1,000/- உதவித்தொகை பெற்று வருவதாகவும் அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் மாணவி பிரியதர்ஷினி நன்றாக கல்வி பயின்று வாழ்வில் உயர வேண்டும் என்று வாழ்த்தியதோடு, விடுதியில் தங்கியுள்ள அவரது தோழியர்களுக்கும் தனது வாழ்த்துகளை தெரிவிக்குமாறு கூறினார்.

“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்” பயன்பெற்று வரும் அரியலூர் மாவட்டம், கோவிந்தபுதூரைச் சேர்ந்த திருமதி ராதிகா அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார். அப்போது திருமதி ராதிகா அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதந்தோறும் ரூ.1,000/- உரிமைத் தொகை பெற்று வருவதாகவும் அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தனது மகனுக்கு உதவிடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு முதலமைச்சர் அவர்கள், அவரது மகன் சிகிச்சைக்குத் தேவையான உதவிகளை செய்து தருவதாகவும், கவலைப்பட வேண்டாம் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கடலூர் மாவட்டம், பண்ருட்டியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவி ப்ரித்தா அவர்களை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது, மாணவி ப்ரித்தா, தனக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை மருத்துவர்கள் வீட்டிற்கே வந்து, அனைத்து பரிசோதனைகளையும் மேற்கொண்டு, மருந்து, மாத்திரைகள் வழங்கி வருவதாகவும், தற்போது உடல்நிலை நன்றாக உள்ளது என்றும் தெரிவித்தார். நல்ல முறையில் படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்திய முதலமைச்சர் அவர்கள், அம்மாணவியின் தந்தையிடம் மகளை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதல்வரின் முகவரித் துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு மிகப்பெரிய ஊழலில் சிக்கியிருக்கிறது!

மக்களை திசை திருப்ப பிரதமர் மோடி உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிறார்!

அமைச்சர் மனோ தங்கராஜ் பேட்டி

சென்னை, மார்ச் 18 -

ஒன்றிய பாஜக அரசு மிகப்பெரிய ஊழலில் சிக்கியிருக்கிறது. இதில் இருந்து மக்களை திசை திருப்ப பிரதமர் மோடி உண்மைக்கு புறம்பான செய்திகளை பேசுகிறார் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று காலை அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

ஒன்றிய பாஜக அரசு மிகப்பெரிய ஊழலில் சிக்கியிருக்கிறது. அதில் இருந்து மக்களை திசை திருப்புவதற்கு இந்திய பிரதமர் பல்வேறு வகைகளில் உண்மைக்கு புறம்பான செய்திகளை பேசுவதை வழக்கமாக கொண்டுள்ளார். 2019ல் இந்த தேர்தல் பத்திர நடைமுறையை கொண்டுவர முயற்சிக்கும் நேரத்தில் ராகுல்காந்தி சொன்னார். இது ஒரு கொள்ளையடிக்கும் முயற்சி என்று குறிப்பிட்டார்.

அதுமட்டுமல்ல அன்றைக்கு ஆர்பிஐஇ தேர்தல் கமிஷன் போன்றவர்கள் இது வெளிப்படை தன்மையை இல்லாமல் ஆக்கிவிடும். இது தேர்தல் நடை முறையை சீரழித்துவிடும். ஊழலை ஊக்குவிக்க வாய்ப்பு வந்துவிடும் என்று கூறினார்கள். அதை எல்லாம் மீறி இன்றைக்கு கோடிகோயாக பணத்தை மிரட்டிஇ ஒரு அரசே பணக்காரர்களை மிரட்டி அடிபணியவைத்து பணத்தை பறித்துள்ளார்கள். இது ஒருபக்கம். இன்னொரு பக்கம் கான்ட்ராக்டர்களுக்கு சலுகைகளை கொடுத்து பணத்தை பெற்று

இருக்கிறார்கள். அதே போன்று நஷ்டத்தில் இயங்கி வந்த பல நிறுவனங்களிடம் இருந்து பலகோடி ரூபாய் வாங்கியுள்ளார். இது பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. அப்படி நஷ்டத்தில் இயங்கின நிறுவனங்கள் எப்படி நூற்றுக்கணக்கான கோடி தர முடிந்தது. அப்ப நீங்கள் வந்து அவர்களை வருமானவரியில் இருந்து பாதுகாப்பதற்காக நஷ்டக்கணக்கு காட்டவைத்தீர்களா? உண்மையிலேயே அது நஷ்டகணக்கில் ஓடிக்கொண்டிருந்தது என்று சொன்னால்இ அவர்களுக்கு வங்கியில் பல லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்துஇ அதற்காக கையூட்டு பெற்று நீங்கள் அந்த பணத்தை பெற்றீர்களா? என்ற கேள்வி எல்லாம் வந்து கொண்டிருக்கிறது.

இதில் மிகப்பெரிய தருணத்தில் இருந்து கொண்டு இருக்கிறோம். கொஞ்சநாள் முன்னாடி தான் சிஏஜி அறிக்கை வந்து மிகத்தெளிவாக பல லட்சம் கோடி தவறு நடந்து இருக்கிறது என்று சொல்லியது. இந்த நேரத்தில்இ அதையும் மூடி மறைப்பதற்கு பல்வேறு சம்பந்தமில்லாதஇ சாதாரண மக்களுக்கு தேவையில்லாத பிரச்னைகளை எல்லாம் பேசிக்கொண்டு மக்களிடம் உணர்ச்சி ஏற்படுத்தி திசைதிருப்புகிறீர்கள். இப்போது தான் அதையும் பண்ண போறீங்க. இப்போது கன்னியாகுமரியில் அவர் வந்து மீனவர்கள் பாதுகாப்பு என்று சொல்கிறார். நான் அவரை பார்த்து நேருக்கு நேராக ஒரு கேள்வியை வைக்கிறேன். சீனா வந்து வடஇந்தியாவில் 4 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பகுதியை ஆக்கிரமித்துள்ளது உங்கள் ஆட்சியில் என்று பல குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளது. அதை வாய்மூடி பார்த்து கொண்டிருந்தீர்களா? உங்கள் அரசியல் சாதுர்யம் மூலமாகவோஇ மிகப்பெரிய ராணுவ கட்டமைப்பு மூலமாகவோ கட்சத்தீவை மீட்டு எடுப்பதற்கு ஏதாவது முயற்சி செய்தீர்களா? எந்த முயற்சியும் செய்யவில்லை. இதில் மிகப்பெரிய பரிதாபம் என்னவென்றால்இ 2018ல் பாஜக ஆட்சி இருக்கும் பொது தான் முதல் முறையாக இலங்கை நம் மீனவர்களிடம் இருந்து கைப்பற்றிய படகுகளை விலைக்கு விற்று தேசியமயமாக்கினார்கள். அதை வாய்மூடி மவுனியாக மோடி அரசு பார்த்து கொண்டிருந்தது.

நாட்டில் கைப்பற்றப்பட்ட படகை வாங்கி கொடுக்க துப்பு இல்லாத ஒரு பிரதமர்இ மீனவர்களை பாதுகாப்போம் என்று சொல்லியிருக்கிறார். ஒக்கி புயல் வந்தது. கன்னியாகுமரியில் எவ்வளவோ மீனவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்களின் அழுக்குரலை கேட்டு அவர் வரவில்லை. அப்போதைய எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் ராகுல்காந்தி வந்தார்கள். அதற்கு அப்புறம் காலம் கடந்து மோடி வந்தார். கன்னியாகுமரியில் பாதிப்பு இல்லை. மேற்கு கடற்கரையில் தான் பாதிப்பு என்று அந்த பகுதிக்கே செல்லாமல்இ கன்னியாகுமரி விருந்தினர் இல்லத்தில் ஹெலிபேடில் இறங்கி புகைப்படம் கண்காட்சியை மட்டும் பார்த்து விட்டு சென்று விட்டார். எல்லாரும் கோரிக்கை வைத்தோம். கடற்கரையில் மீனவர்கள் அடிக்கடி காணாமல் போகிறார்கள்.

ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுத்துஇ ஹெலிகாப்டர் மூலமாக தேடும் வாய்ப்பை ஏற்படுத்தி தாருங்கள் என்றோம். 10 ஆண்டுகாலம் எதையும் செய்யவில்லை. இன்றைக்கு பார்த்தீர்கள் என்றால் இலங்கையில் 28 மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததற்காக கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளார்கள். திரும்ப திரும்ப முதல்வர் அங்குள்ள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி மீட்டு தாருங்கள் என்று ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். இரண்டு வாரங்களுக்கு முன்பாக சவுதி அரேபியாவில் மாட்டியிருந்தவர்களை திமுக அயலக அணியும்இ வெளிநாடு வாழ் தமிழர்களும் இணைந்து மீட்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் பிரதமர் எப்படி மீனவர்களை பாதுகாப்பார் என்று தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

திருப்பூர் மாநகராட்சி, முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சதீஷ்குமார், திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டலத்தலைவர் சி.கோவிந்தசாமி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், 15 வேலம்பாளையம் பகுதி கழக செயலாளர் கொ.இராமதாஸ் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நகரச் செயலாளர் ம.சுப்பராயன் வரவேற்புரை!

சீர்காழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்!

நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. - புதுக்கோட்டை விஜயா சிறப்புரை ! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, மார்ச் 18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் சீர்காழி பிடாரி வடக்கு வீதியில் நடைபெற்றது.

பொது கூட்டத்திற்கு முன்னாள் நகர செயலாளர் எஸ்.துரை தலைமை தாங்கினார். சீர்காழி நகர கழக செயலாளரும், சீர்காழி நகர மன்ற துணைத் தலைவர் ம.சுப்பராயன் வரவேற்றார்.

முன்னாள் நகர செயலாளர் வை.சு.மணி, நகர அவைத் தலைவர் ஏ.குகன், நகர துணை செயலாளர்கள் ஆர்.எம்.முத்து, சிவப்பிரியா துரை, நகர பொருளாளர் சி.சங்கர், மாவட்ட பிரதிநிதிகள் ஏ.பி.எஸ்.பாஸ்கரன், நகர இளைஞரணி அமைப்பாளர் எம்.ஆர். ஆர்.ராஜசேகரன், நகர கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஜி.சட்ட நாதன், பாக நிலை முகவர்கள் சித்தார்த்தன்,

சி.நாகராஜன், எஸ். அண்ணா, எஸ்.குமரகுரு, எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஜி.முருகேசன், ஏ.ராதிகா, முத்துக்குமார், ஜெயந்தி பாபு ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் புதுக்கோட்டை விஜயா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பொதுக்கூட்டத்தில் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி..சீனிவாசன், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர்க ஜி.என்.ரவி, மாவட்டக்கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர்கள் செல்லசேது.ரவிக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார். மலர்விழிதிருமாவளவன், பேரூர் கழக செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், முத்துராஜா , சீர்காழி நகர மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரிராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர் எம்.பி.கென்னடி, மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பொறியாளர் அணி இரா.காளி. கலைவாணன், தொண்டரணி எம்.எஸ்.முத்து குபேரன், தொழிலாளர் அணி இரா.தனராஜ், முன்னாள் நகர செயலாளர்கள் இரா. பொன்முடி, வி.திருஞானசம்பந்தம், தரங்கம்பாடி பேரூராட்சி துணைத் தலைவர் ராஜேந்திரன், ஊராட்சி குழு உறுப்பினர்கள் தியாக. விஜஸ்வரன், விஜய பாரதி கென்னடி,

மாவட்ட சார்பு அணி துணை அமைப்பளர்கள் தொழிலாளர் அணி ஏ.இளையராஜா, விவசாய தொழிலாளர் அணி இரா. செல்வமுத்துக்குமார், சுற்றுச்சூழல் அணி எஸ்.வி.ஆர். திருச்செல்வம், இளைஞர் அணி ஜெ. ஜிபையர்அகமது, கலை இலக்கிய பகுத்தறிவு எம். பாஸ்கர், மாணவர் அணி வி.ஆர்.டி.முத்துக்குமார், தகவல் தொழில் நுட்ப அணி ஸ்ரீராம், விவசாய தொழிலாளர் அணி கே.பி. குலோத்துங்கன், அயலக அணி கே.ஜி.எஸ்.பாண்டியன், விவசாய அணி எஸ். ராமு, மகளிர் அணி தனவல்லிமுத்துக்குமார், விவசாய அணி சங்கர பாண்டியன், மகளிர் தொண்டர் அணி மகேஸ்வரி மாரிமுத்து, தொண்டரணி எத்திராஜ், வர்த்தக அணி மேனகா அருண்குமார், சுற்றுச்சூழல் அணி ஜெ சதீஷ், விவசாய அணி ஜி.பாலகிருஷ்ணன், சீர்காழி மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் சி.வீரமணி, கே.சசிகுமார், சி விஜயகுமார், மகேந்திரன், சீர்காழி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், சுதாகர், கொள்ளிடம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் டி. செந்தாமரைக்கண்ணன், எஸ்.கனகராஜ், கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் ராஜேந்திரன், இளவரசி, லதாசுப்பிரமணியன், வைத்தீஸ்வரன் கோயில் பேரூர் நிர்வாகிகள் வி.சுந்தர மூர்த்தி, பி.இராமலிங்கம், வி.ஆனந்த், ஆர்.சரோசா, ஆர்.சேகர், கமலநாதன் மற்றும் சீர்காழி நகர மன்ற உறுப்பினர்கள், சீர்காழி வார்டு கழக செயலாளர், நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

முடிவில் எஸ்.எஸ்.ஆர். இந்திரஜித் நன்றி கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (16.03.2024) திருச்சிராப்பள்ளி மேல புலிவார் சாலையில் உள்ள இரண்டு புத்தக விற்பனை நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் விற்பனை பிரிவை திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் ஆர்.கஜலட்சுமி, இணை இயக்குநர் சங்கர சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, மண்டல தலைவர் மதிவாணன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.